**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**

**KANYAKUMARI AT NAGERCOIL.**

C.O.S. No. 2/2024

**<u>Deposition of the witness:</u>** P.W. **1**

Solemnly affirmed by Thiru/Tmt Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ராஜ பிரவீன் |
| Father's Name | : | வர்கீஸ் |
| Village | : | நீண்டகரை ஏ |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | ஒப்பந்ததாரர் |
| Religion | : | கிறிஸ்டியன் |
| Age | : | 35 |
| Date | : | 02.01.2025 |

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் இந்த வழக்கின் வாதி. என் சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். 24.01.2000 ஆம் தேதியிட்ட வர்க்கீஸின் கடனளிப்புச் சான்றிதழ் நகல் வா.சா.ஆ. 1 ஆகவும், 28.09.2018 ஆம் தேதியிட்ட பேருந்து நிலையம் மற்றும் மீன் சந்தை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்த ஆணை நகல் வா.சா.ஆ. 2 ஆகவும், 30.01.2019 ஆம் தேதியிட்ட வர்க்கீஸ் அவர்களின் பெயரில் பணி ஆணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 3 ஆகவும், 01.02.2019 ஆம் தேதியிட்ட வர்க்கீஸ் மற்றும் 1 ஆம் பிரதிவாதிக்கும் இடையேயான ஒப்பந்த நகல் வா.சா.ஆ. 4 ஆகவும்,

07.06.2019 முதல் 22.03.2022 வரை வர்க்கீஸ் மற்றும் வாதிக்கு வழங்கப்பட்ட பண விவரங்கள் 27.07.2023 ஆம் தேதியிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட தகவல் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 5 ஆகவும், 06.08.2020 ஆம் தேதியிட்ட வர்க்கீஸின் இறப்புச் சான்றிதழ் நகல் வா.சா.ஆ. 6 ஆகவும், 26.08.2020 ஆம் தேதியிட்ட வர்க்கீஸின் வாரிசுச் சான்றிதழ் நகல் வா.சா.ஆ. 7 ஆகவும், 28.02.2014 ஆம் தேதியிட்ட வாதியின் கடனளிப்புச் சான்றிதழ் நகல் வா.சா.ஆ. 8 ஆகவும், 07.10.2020 ஆம் தேதியிட்ட பேருந்து நிலையம் மற்றும் மீன் சந்தை அமைப்பதற்கான ஒப்பந்த புள்ளி நகல் வா.சா.ஆ. 9 ஆகவும், 07.10.2020 ஆம் தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிவிப்பு நகல் வா.சா.ஆ. 10 ஆகவும், 15.11.2022 ஆம் தேதியிட்ட அஞ்சலக ரசீதுகள் (6 எண்ணங்கள்) அசல் வா.சா.ஆ. 11 ஆகவும், ஒப்புதல் அட்டைகள் (6 எண்ணங்கள்) அசல் வா.சா.ஆ. 12 ஆகவும், வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது) வா.சா.ஆ. 13 ஆகவும் மற்றும் 05.01.2024 ஆம் தேதியிட்ட சட்ட உதவி மையம், நாகர்கோவில் வழங்கிய Non-Starter Report அசல் வா.சா.ஆ. 14 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.